## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 07.03.2008 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

**தஸஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் சூரா அல்பக்கராவின் 122 -வது வசனத்தை ஓதினார்கள்.**

*பொருள்: எவர்களுக்கு நாம் வேதம் வழங்கியுள்ளோமோ அவர்கள், அதனை ஓத வேண்டிய முறைப்படியே (அதற்குரிய உரிமையை நிறைவேற்றியவாறு) ஓதுகின்றனர். அவர்களே அதில் நம்பிக்கை கொள்கின்றனர். அதனை மறுக்கின்றவர்களே நஷ்டவாளிகளாவர். (2:122)*

கடந்த குத்பாவில் திருக்குர்ஆன் வசனங்களின் அடிப்படையில் மேற்கத்திய நாடுகளில் இஸ்லாத்திற்கு எதிராக அதை வெறுக்கும் சூழ்நிலை ஏன் உருவாக்கப் பட்டிருக்கின்றது? என்பதை நான் விளக்கிக் கூறியிருந்தேன். மேலும், இஸ்லாம் வெற்றி பெறும் என்பதும், அல்லாஹ்வின் வேதமாகிய திருக்குர்ஆன் இறுதிநாள் வரை பாதுகாக்கப்படும் என்பதும் இறைவனின் வாக்குறுதியாகும் என்றும் நான் கூறியிருந்தேன். இவர்களின் இந்த தாக்குதல்கள் இஸ்லாத்தை சீர்குலைக்கவும் முடியாது. திருக்குர்ஆனின் ஒளியை போக்கவும் முடியாது. எவர்கள் நேரடியாக இந்த தாக்குதல்களில் ஈடுபட்டுள்ளார்களோ அல்லது எவர்கள் பின்னால் இருந்து கொண்டு இவர்களுக்கு உதவி செய்து வருகின்றார்களோ அவர்கள், இஸ்லாத்திற்கு எதிராக தங்கள் காழ்ப்புணர்ச்சியைத்தான் வெளிப்படுத்திக் காட்டியுள்ளார்கள்.

இஸ்லாத்தின் எதிரிகள் எல்லா சமயத்திலும் இந்தப் பணிகளை செய்து கொண்டு தான் இருப்பார்கள். ஆனால், இப்படிப்பட்ட சூழ்நிலை உருவாகி இருக்கும்போது நமது எதிர்நடவடிக்கைகள் எப்படி இருக்க வேண்டும்? ஒரு அஹ்மதி முஸ்லிம் தன்னிடத்தில் எப்படிப்பட்ட சிறப்புத் தன்மைகளை உருவாக்க வேண்டும்? எதன் மூலம் அவர்கள் இஸ்லாத்தின் எதிரிகளின் ஆட்சேபனைகளை மறுக்க முடியும்? தனது காலத்தின் இமாமிடம் செய்த உடன்படிக்கைக்கு ஏற்ப அவர்கள் எப்படி அவர்களது படையின் தளபதியாக ஆக முடியும்? இஸ்லாத்தின் அழகிய போதனைகளை தங்களிடத்தில் செயல்படுத்திக் காட்டுபவர்களுக்கு அல்லாஹ் வழங்குவதாக வாக்களித்துள்ள அருட்கொடைகளுக்கு அவர்கள் எப்படி வாரிசாக முடியும்? இந்த கேள்விகளுக்கு விடை கூறும் முகமாக நான் இன்று சில விஷயங்களைக் கூறுவேன். அல்லாஹ் நம்மிடம் எதை விரும்புகின்றான்? இந்த அழகிய போதனைகள் தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்ன கூறியுள்ளார்கள்? ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பராகத் திகழ்ந்த ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இதுபற்றி விளக்கிக் கூறியவாறு நம்மிடம் என்ன எதிர்பார்ப்புகளை வைத்துள்ளார்கள்? என்பதைப் பற்றி கூறவுள்ளேன்.

அதற்கு முன்பு எனது பார்வையில் வந்த ஒரு நூலைப் பற்றி கூற இருக்கிறேன். அந்த நூலின் பெயர் Women Embracing Islam - அதாவது பெண்கள் இஸ்லாத்தை தழுவி வருகின்றனர் என்பதாகும். அதில் பெண்கள் ஏன் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்கின்றனர் என்பதைப் பற்றிய பல காரணங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நூலை எந்தவொரு நபரும் எழுதவில்லை. மாறாக, இதனை கரின்வான் நியூமேன் என்ற பெண் Edit செய்துள்ளார். இந்த நூல் உண்மையில் பல்வேறு ஆராய்ச்சிகள் செய்த பிறகு வெளியிடப்பட்டிருக்கிறது. ஹாலந்திலுள்ள ஒரு நகரமாகிய நேமெஹெனில் நடைபெற்ற ஒரு மாநாட்டில் அந்த நகரத்திலுள்ள பல்கலைக்கழகத்தில் இவ்விஷயம் தொடர்பாக ஆராய்ச்சி செய்தவர்கள் தங்களது கட்டுரையை வாசித்தார்கள். 2003 ஆம் ஆண்டில் இந்த மாநாடு நடைபெற்றது. இந்த கட்டுரைகளின் தொகுப்பை கரின்வான் நியூமேன் என்ற பெண் Edit செய்தார். 2006 ஆம் ஆண்டு நூல் வடிவில் இந்த புத்தகம் வெளியாகியிருக்கின்றது. இதில் பலரது கருத்துகளும் இடம் பெற்றுள்ளன. சில ஆண்டுகளாக மார்க்கத்தின் பக்கம் மக்களுக்கு ஆர்வம் ஏற்பட்டிருக்கின்றது என்ற வரிகளுடன் இந்த நூல் கூறும் கருத்துக்கள் தொடர்கின்றன. 2001 ஆம் ஆண்டு செப்டம்பர்

மாதம் 11 ஆம் தேதிக்குப் பிறகு இஸ்லாத்தின் பக்கம் மக்களுக்கு அதிகம் ஆர்வம் உருவாகியிருக்கின்றது. இது இஸ்லாத்தை எதிர்க்கின்ற மேற்கத்திய நாடுகளிலுள்ள கிறிஸ்தவர்களின் பொதுவான கருத்துக்கணிப்பாகும் என்றும் அந்த நூலில் எழுதப்பட்டிருக்கின்றது. மேலும் இறைவனை ஏற்க மறுக்கின்றவர்களின் கருத்தும் இதுவேயாகும் என்றும் அந்த நூலில் எழுதப்பட்டிருக்கின்றது. எழுதுபவர் தொடர்ந்து எழுதுகின்றார்:

"இதற்கு அரசியல் காரணங்கள்தான் அதிகமாக இருக்கின்றன என்று கருதப்படுகின்றது. ஆனால், இஸ்லாத்தை ஏற்றுக் கொள்பவர்களின் மூளையில் இந்த விஷயம் பதிந்தாலும் பதியாவிட்டாலும் சரியே."

அரசியல் காரணங்களுக்காகத்தான் இவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்கின்றனர் என்பது இவர்களின் எண்ணமாகும். இவ்வாறு கருதப்பட்டால், அதை தடுப்பதற்காக மார்க்கத்தின் போர்வையில் அரசியல் சக்திகளும், அரசியலின் போர்வையில் மார்க்கத்தின் சக்திகளும் செயல்படுகின்றன என்றே நாம் கூறுவோம். உள்ளத்தை ஈர்க்கக்கூடிய ஒரு விஷயத்தை நான் இப்போது குறிப்பிட விரும்புகின்றேன்.

***இந்த நூலில் இவர்கள் அமெரிக்காவில் முதன் முதலில் இஸ்லாத்தைப் பரப்ப வந்த கொள்கைப்பரப்புநர் அஹ்மதி முஸ்லிமாவார் என்று எழுதியிருக்கின்றார்.*** இந்தியாவில் கிறிஸ்தவ பிரச்சாரகர்கள் செய்த பிரச்சாரத்தை தடுக்கும் வகையில் அல்லது இஸ்லாத்தின் மீது தொடுக்கப்பட்ட தாக்குதல்களை நிறுத்துவதற்காகவே அஹ்மதி பிரச்சாரகர் அமெரிக்கா வந்தார் என்று இவர்கள் எழுதியுள்ளார்கள். ஆனால், இவர்கள் இந்த விஷயத்தை தங்கள் தரப்பிலிருந்து இட்டுக்கட்டி கூறியுள்ளார்கள். அமெரிக்காவிற்கு வேறு இடங்களிலிருந்தும் இடம்பெயர்ந்து வந்துள்ள முஸ்லிம்களுக்கு, அமெரிக்காவில் சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்துவதற்காகவே அஹ்மதிகள் அங்கு வந்ததாகவும், அதற்காக அவர்கள் வெள்ளையர் இனத்தைச் சார்ந்த அமெரிக்கர்களை இஸ்லாத்தை தழுவச் செய்து அவர்கள் மதம் மாறுவதற்கான முயற்சிகளை செய்ததாகவும் அதில் ஓரளவே அவர்களுக்கு வெற்றி கிடைத்தது; அதன் காரணமாக ஒரு சிலரே இஸ்லாத்தை தழுவினார்கள் என்றும் அந்த நூலில் எழுதப்பட்டிருக்கின்றது. தொடர்ந்து அதில் இவ்வாறும் எழுதப்பட்டிருக்கின்றது. வேறு இடங்களிலிருந்து இடம்பெயர்ந்து வந்த எந்த முஸ்லிம்களை அஹ்மதிகள், அமெரிக்காவில் குடியிருக்கச் செய்ய வைக்க வேண்டும் என்று எண்ணினார்களோ, எவர்கள் மூலம் இந்த அஹ்மதிகள் தங்கள் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்ய முயற்சிகளை செய்தார்களோ, அந்த இடம்பெயர்ந்து வந்த முஸ்லிம்களே அஹ்மதிகளாகிய இவர்களை இஸ்லாத்தின் வட்டத்திலிருந்து வெளியேற்றி விட்டார்கள். இறுதியில் அஹ்மதிகள் தங்கள் முயற்சியில் வெற்றி பெற வேண்டுமென்றால், அதற்கான வழி கருப்பர்கள் இனத்தைச் சார்ந்த (Afro American) மக்களை இஸ்லாத்தை தழுவும்படி செய்வது தான் என்று எண்ணினார்கள். நீங்கள் முஸ்லிம்களாக மாறினால்தான் நீங்கள் சமுதாயத்தில் தகுதி பெற்றவர்களாக இனங்கண்டு கொள்ளப்படுவீர்கள். உங்களது தலைமுறையின் வேர்கள் இஸ்லாத்தில்தான் இருக்கின்றது. நீங்கள் வலுக்கட்டாய மாகத்தான் கிறிஸ்தவர்களாக மாற்றப்பட்டீர்கள். இந்த கிறிஸ்தவர்கள் உங்கள் மீது கொடுமையிழைத்துள்ளார்கள். எனவே, சமுதாயத்தில் சம உரிமையை நீங்கள் பெற விரும்பினால் அது உங்களுக்கு இஸ்லாத்தில் மட்டும்தான் கிடைக்கும் என்றும் இவ்வாறு கருப்பர் இன அமெரிக்கர்களும், அமெரிக்காவிலுள்ள முஸ்லிம்களும் ஒன்றாக இணைந்து ஒரு வலுமிக்க சக்தியாக உருவாகுவதற்கு நீங்கள் முஸ்லிம்களாக வேண்டியது அவசியமாகும் என்றெல்லாம் கூறி அஹ்மதிகள் கருப்பர் இனத்தைச் சார்ந்த அமெரிக்கர்களுக்கு தப்லீக் செய்தார்கள். அஹ்மதிகள் மேற்கொண்ட இந்த வழிமுறையை மற்ற முஸ்லிம்களும் பின்பற்றி செயல்பட்டதன் விளைவாக கருப்பர்கள் இனத்தைச் சேர்ந்த அமெரிக்கர்களுக்கு மத்தியில் இஸ்லாம் வேகமாக பரவியது; இன்றும் பரவிக் கொண்டிருக்கின்றது என்று இவர்கள் இந்த நூலில் எழுதியுள்ளார்கள்.

இரண்டாவதாக, இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதில் மிக அதிகமான எண்ணிக்கையில் இருப்பவர்கள் வெள்ளையர்கள் இனத்தைச் சார்ந்த அமெரிக்கர்களான பெண்களாவர் என்றும் இந்த

நூலில் எழுதப்பட்டிருக்கின்றது. இவர்களது இந்த எழுத்துக்களிலிருந்தும் நமது ஜமாஅத்தைப் பற்றி இவர்கள் எல்லா விபரங்களையும் சேகரித்து அவற்றை அறிந்து வைத்திருக்கின்றார்கள் என்பது தெரிகிறது. ஆனால், ஜமாஅத்தைப் பற்றி இவர்கள் கூறியவை சரியான விஷயங்கள் அல்ல.

பிறகு இந்த நூலில் அவர்கள் இவ்வாறும் எழுதியுள்ளார்கள்: ஒரு இடத்தில் இஸ்லாத்தில் புதிதாக இணைந்த ஒரு வெள்ளையர் இனத்தைச் சார்ந்த அமெரிக்கப் பெண்ணிடம் நீங்கள் ஏன் முஸ்லிமாக மாறி விட்டீர்கள்? என்று கேட்கப்பட்டது. கலிமா கூறி முஸ்லிமாகி விட்டால் அவர் அன்று பிறந்த எந்த பாவமும் செய்யாத ஒரு குழந்தை போல் ஆகி விடுகின்றார். அவ்வாறே இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதால் மறுமையில் சுவர்க்கத்தில் நுழைவதன் மூலம் நமது பாவங்கள் மன்னிக்கப்பட்டு விடும் என்பதால்தான் நான் இஸ்லாத்தை தழுவியுள்ளேன் என்று அந்தப் பெண் கூறியதாக அந்த நூலில் எழுதப்பட்டிருகின்றது. கலிமா கூறுவதன் மூலம் ஒருவர் தூய்மையடைகின்றார் அல்லது அவரது பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன என்ற இந்த விஷயம் ஒருபோதும் இஸ்லாத்தின் எதிரிகளால் சகித்துக் கொள்ள முடியாத விஷயமாகும். குறிப்பாக, மேற்கத்திய நாடுகளில் உள்ளவர்களால் இதை சகித்துக் கொள்ள முடியாது. இவர்களில் ஒரு சாரார் நமது பாவங்களுக்காக இன்னொருவர் பலியானார் என்பது எப்படி சரியான விஷயமாக இருக்க முடியும்? என்று கேட்க ஆரம்பித்து விட்டார்கள் என்பது இதிலிருந்து தெரிகிறது. இது தவறான கருத்து என்பதை அவர்கள் சிந்திக்க ஆரம்பித்து விட்டார்கள். தங்களது பாவங்களைப் பற்றி கவலைப்படுபவர்களால் மட்டும்தான் இப்படி சிந்திக்க முடியும். மனிதன் பாவமற்றவனாக இருக்க வேண்டும். மறுமையில் சுவர்க்கம், நரகம் ஆகியவை உள்ளன என்று இவர்களால்தான் உறுதிகொள்ள முடியும். எனவே, கிறிஸ்துவத்தின் அடித்தளம் மறுக்கப்படும் வகையில் கலிமாவின் கருத்து மேலோங்கி நிற்பதால் அவர்களால் அதை சகித்துக் கொள்ள முடியவில்லை. எவ்வாறிருப்பினும், ஒரு திட்டமிட்ட Scheme -ற்கு ஏற்பவே இவர்கள் இஸ்லாத்திற்கு எதிராக தாக்குதல்கள் நடத்தி வருகின்றார்கள். இந்த நூலிலிருந்து ஒரு சில கருத்துக்களைத்தான் நான் உங்கள் முன்னால் வைத்திருக்கின்றேன். இந்த நூல் பல ஆய்வுக் கட்டுரைகளை தன்னகத்தே கொண்டுள்ள ஒரு தொகுப்பு நூலாக இருப்பதால் இதில் இடையிடையே இஸ்லாத்தைப் பற்றிய நல்ல விஷயங்களும் வெளிப்படுத்திக் காட்டப் பட்டிருக்கின்றது. ஆனால் இவர்கள் என்ன செய்தாலும் அதன் விளைவாக இஸ்லாத்தின் பக்கம் மக்களது கவனம் திரும்பும்போது, இஸ்லாத்தை எதிர்க்கும் சக்திகள் ஒரு கூட்டு முயற்சியில் ஒன்றுசேர்வது கட்டாய எதிர்விளைவாக இருக்கின்றது. அதுதான் இப்போது நடந்து வருகிறது.

நான் ஆரம்பத்தில் கூறியது போலவே இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஒரு அஹ்மதியின் பணி என்ன? என்ற கேள்விக்கான பதிலைக் கூறுகிறேன். முதல் விஷயம் ஒரு அஹ்மதி பைஅத் செய்யும்போது நான் என்னிடம் ஒரு ஆன்மீகமான மாற்றத்தை ஏற்படுத்துவதற்காகவே காலத்தின் இமாமிடம் பைஅத் செய்துள்ளேன் என்று வாக்குறுதி கூறுகின்றார். அதற்காக அவர் அல்லாஹ்வுடன் அவருக்குள்ள உறவை வலுப்படுத்தி இறைவணக்கத்தில் உயர்வான தரத்தைப் பெற வேண்டும். இரண்டாவதாக, இஸ்லாமிய போதனைகளின் பக்கம் அவரது கவனம் இருக்க வேண்டும். அதனை திருக்குர்ஆனின் வடிவத்தில் அல்லாஹ் நமக்கு இறக்கியுள்ளான்.

**இது தொடர்பாக அல்லாஹ் கூறுகின்றான்:**

எனது வேதத்தை அதற்குரிய உரிமையை நிறைவேற்றியவாறு நீங்கள் படிக்க வேண்டும்.

**நான் தற்போது ஓதிய திருக்குர்ஆன் வசனத்தில் அல்லாஹ் கூறுகின்றான்:**

***எவர்களுக்கு நாம் வேதத்தை வழங்கியுள்ளோமோ அவர்கள் அதை ஓதுவதற்குரிய உரிமையை முறைப்படி நிறைவேற்றி அதை ஓத வேண்டும். இத்தகையவர்களே அந்த வேதத்தின் மீது உண்மையாக நம்பிக்கை கொள்பவர் ஆவர். அதை மறுப்பவர்களே நஷ்டவாளிகளாவர். (2:122)***

திருக்குர்ஆன் ஓதுவதற்குரிய உரிமை என்ன? நாம் திருக்குர்ஆனை ஓதும்போது அல்லாஹ் நாம் செய்யுமாறு கட்டளையிடுகின்ற விஷயங்களும் நாம் செய்யாமல் இருக்கும்படி நம்மை

அல்லாஹ் தடுக்கின்ற விஷயங்களும் வரும்போது நாம் அதைப்பற்றி சிந்தனை செய்ய வேண்டும். அல்லாஹ் செய்யுமாறு கட்டளையிட்டுள்ள விஷயத்தை செய்ய வேண்டும். அல்லாஹ் செய்யக் கூடாது என்று தடை செய்துள்ள விஷயங்களிலிருந்து நாம் விலக வேண்டும்.

எங்களிடமும் ஒரு வேதம் இருக்கின்றது என்பதுதான் யூதர்களும், கிறிஸ்தவர்களும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முன்பு எடுத்து வைத்த வாதமாகும். மேலும் முஸ்லிம்கள் அவர்கள் கூறுவதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று அவர்கள் விரும்பினார்கள். உங்களது வேதம் உண்மையானது என்று கூறும் அளவில் உள்ள தகுதி உங்களது வேதத்திற்கு இல்லை என்று கூறி யூதர்களின் செயல்கள் அவர்கள் பின்பற்றும் வேதத்திற்கு மாற்றமாக இருந்தது. அவர்கள் சில விஷயங்களை வெளிப்படுத்திக் காட்டினார்கள். சிலவற்றை மறைத்தார்கள். எனவே, அல்லாஹ் அவர்களிடம் உங்களது வேதத்தால் இனி நேர்வழி காட்ட முடியாது. மாறாக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தோன்றிய பிறகு, அவர்களுக்கு இந்த ஷரீஅத் இறங்கிய பிறகு இப்போது திருக்குர்ஆன்தான் ஒருவருக்கு நேர்வழியைக் காட்ட முடியும் என்று கூறிவிட்டான். சஹாபாக்களின் வாழ்க்கை, அவர்கள்தான் இந்த வேதத்தை ஓதுவதற்குரிய சரியான உரிமையை நிறைவேற்றியுள்ளனர் என்பதை நிரூபிக்கின்றது. இவர்கள்தான் உண்மையான நம்பிக்கையாளர்களாகத் திகழ்ந்தார்கள். ஏனென்றால், அல்லாஹ் உண்மையான நம்பிக்கைக்கு அதற்கேற்ற நல்ல செயல்கள் செய்வதை நிபந்தனையாக வைத்துள்ளான். திருக்குர்ஆன் ஓதுவதற்குரிய உரிமையை சரியாக நிறைவேற்றுபவர்கள்தான் உண்மையான நம்பிக்கையாளராக இருக்கின்றார். அந்த நம்பிக்கைக்கு ஏற்ற நல்ல செயல்களை செய்பவர்தான் உண்மையான நம்பிக்கையாளராக இருக்கின்றார். நீங்கள் உங்களுக்கு வழங்கப்பட்ட வேதத்தை ஓதிவிட்டு அதிலுள்ள கட்டளைகளுக்கேற்ப நீங்கள் செயல்படவில்லையென்றால் உங்களது ஈமான் முழுமையடையாது என்று அல்லாஹ் இந்த வசனத்தின் மூலம் முஸ்லிம்களை எச்சரித்துள்ளான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது முன்னறிவிப்புகளிலும் அவர்கள் இந்த எச்சரிக்கையை செய்துள்ளார்கள். இவ்வாறு முஸ்லிம்கள் திருக்குர்ஆனின் போதனைகளுக்கேற்ப செயல்படாத ஒரு காலகட்டத்தில்தான் அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை தோன்றச் செய்தான். எவர்கள் இந்த காலத்தில் அந்த மஹ்தியின் ஜமாஅத்தில் தன்னை இணைத்துக் கொண்டு திருக்குர்ஆனின் கட்டளைகளுக்கேற்ப செயல்படுவாரோ அவர்தான் உண்மையில் திருக்குர்ஆனை அதை ஓத வேண்டிய உரிமையை நிறைவேற்றியவாறு ஓதுபவராவார். எனவே, திருக்குர்ஆனின் கட்டளைக்கேற்ப எந்த அளவு நாம் செயல்படுகின்றோம் என்று ஆய்வு செய்து பார்க்க வேண்டியது ஒவ்வொரு அஹ்மதியின் பொறுப்பாக இருக்கின்றது. அந்த கட்டளைகளை அல்லாஹ் திருக்குர்ஆனில் நமக்கு தெளிவாகக் கூறியுள்ளான்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

மக்கள் திருக்குர்ஆனை ஓதுகின்றார்கள். ஆனால், கிளியைப் போல் அதன் சொற்களை மட்டும் நன்றாக உச்சரித்து விடுகின்றார்கள். ஒரு வேதப்பண்டிதன் சுலோகங்களை அதிலுள்ள கருத்துக்களைப் புரிந்து கொள்ளாமல் கண்மூடித்தனமாக படிப்பதைப் போன்றே இவர்களும் திருக்குர்ஆனைப் படிக்கின்றார்கள். படிக்கின்ற அவர்களும் அதைப் புரிந்து கொள்ள முடியாது. கேட்பவர்களாலும் அதைப் புரிந்து கொள்ள முடியாது. திருக்குர்ஆனின் இரண்டு அல்லது மூன்று பாகங்களை அவர்கள் ஓதுகின்றார்கள். ஆனால், அவர்கள் என்ன ஓதினார்கள்? என்பது அவர்களுக்கே தெரியாது. அதிகபட்சம் அழகான ராகத்துடன் அதை ஓதுவார்கள். காஃப், அய்ன் ஆகிய சொற்களை சரியான முறையில் உச்சரிப்பார்கள். திருக்குர்ஆனை சிறந்த முறையில் அழகிய ராகத்துடன் ஓதுவதும் நல்ல விஷயம்தான். ஆனால், திருக்குர்ஆன் ஓதுவதன் உண்மையான நோக்கம் அதன் நுட்பமான உண்மைகளையும், ஞானங்களையும் ஒருவர் புரிந்து கொள்வதேயாகும். அதன் போதனைகளை அறிந்து மனிதன் தன்னிடம் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். நன்றாக நினைவில் கொள்ளுங்கள். திருக்குர்ஆனில் வியக்கத்தக்க உண்மையான தத்துவங்கள் உள்ளன.

அதில் ஒரு சீரான அமைப்பு இருக்கின்றது. அதற்கு கண்ணியம் வழங்கப்படவில்லை. எதுவரை திருக்குர்ஆனின் ஒழுங்குமுறை வரிசையையும் அதன் சீரான அமைப்பையும் நாம் கருத்தில் கொள்வதில்லையோ, மேலும் அதை முழுமையான முறையில் சிந்திப்பதில்லையோ அதுவரை திருக்குர்ஆனை ஓதுவதன் நோக்கம் நிறைவேறாது.

திருக்குர்ஆனை அதற்குரிய உரிமையை நிறைவேற்றி ஓதுவது இவ்வாறு இருக்க வேண்டும் என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள். ஒரு சமயத்தில் திருக்குர்ஆனை ஓதும்போது அதன் சொற்களை சரியாக உச்சரிக்க முடியாமல் ஜமாஅத் சகோதரர்கள் இருப்பதை அறிந்த ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் திருக்குர்ஆனை அதன் சொற்களை சரியாக உச்சரித்து ஓதுவதன் பக்கம் ஜமாஅத்திற்கு கவனமூட்டினார்கள். ஏனென்றால், சில சொற்களை உச்சரிப்பதில் தவறிழைக்கின்ற காரணத்தால் அதன் பொருள் மாறி விடும். அல்லது அதில் கூறப்பட்டுள்ள கருத்து தெளிவில்லாமல் ஆகிவிடும். அல்லாஹ்வின் அருளால் அதற்குப் பிறகு ஜமஅத் இவ்விஷயத்தில் தனி கவனம் செலுத்தியது. ஆனால், இப்போது திருக்குர்ஆனின் பொருளைப் படிப்பதன் பக்கம் கவனம் செலுத்தப்பட வேண்டும். கிளை அமைப்புகளும் ஜமாஅத்தின் அமைப்பும் இதற்காக பணியாற்ற வேண்டும். அல்லாஹ்வின் அருளால் மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ் U.K, Internet மூலமாக திருக்குர்ஆனின் பொருளைக் கற்றுக் கொடுக்க ஆரம்பித்திருக்கின்றார்கள். இதிலிருந்தும் ஜமாஅத் பலன் பெற வேண்டும். ஏனென்றால், திருக்குர்ஆனின் பொருள் தெரிந்தால்தான் அதன் கட்டளைகள் என்ன என்பதை ஒருவர் சரியாக புரிந்து கொள்ள முடியும். அப்போதுதான் அதன் கருத்துக்களை சிந்தித்து அந்த கட்டளைகளின்படி செயல்படுவதன் பக்கம் ஒருவருக்கு கவனம் ஏற்படும்.

ஒரு நபர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் திருக்குர்ஆனை எவ்வாறு ஓத வேண்டும் என்று கேட்டார். அதற்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் திருக்குர்ஆனை கவனமாக சிந்தித்து ஓத வேண்டும். ஹதீஸில் இவ்வாறு இருக்கின்றது. **ருப்ப காரியுன் யல்ஹனஉல் குர்ஆன்** - திருக்குர்ஆனை ஓதுகின்ற பலரும் இருக்கின்றார்கள். அவர்கள்மீது திருக்குர்ஆன் சாபமிடுகிறது. எவர் திருக்குர்ஆனை ஓதிவிட்டு செயல்படாமல் இருக்கின்றாரோ அவர் மீது திருக்குர்ஆன் சாபமிடுகிறது. திருக்குர்ஆனை ஓதும்போது இறைவனின் கருணையை வெளிப்படுத்தும் வசனங்களை படிக்கும்போது அங்கு இறைவனிடம் அவனது கருணையை வேண்ட வேண்டும். எங்கு ஒரு சமுதாயத்திற்கு கிடைத்த தண்டனை பற்றி கூறப்பட்டுள்ளதோ அங்கு இறை தண்டனையிலிருந்தும் இறைவனின் அடைக்கலத்தின் கீழ் நாம் வருவதற்கு அவனிடம் கேட்க வேண்டும். மேலும் அதை நிதானமாக சிந்தித்து ஓதுவதுடன் அதன் போதனைகளுக்கு ஏற்ப செயல்பட வேண்டும்.

சிலருக்கு நல்ல குரல்வளம் இருக்கும். அவர்கள் திருக்குர்ஆன் ஓதுவது நமது உள்ளங்களை தொட்டு விடும். ஆனால், குரல் நன்றாக இருப்பதால் மட்டும் அதை ஓதுபவருக்கு திருக்குர்ஆனிலிருந்து பலன்பெற முடியாது. அதைப் புரிந்து ஒருவர் ஓதாதவரை அவருக்கு எந்த பலனும் கிடைக்காது. அவ்வாறு அழகிய குரலில் ஒருவர் திருக்குர்ஆன் ஓதும்போது அதைக் கேட்பவர் அந்த வசனங்களின் பொருளை அறிந்து இருந்தால் அது அவருக்கு பயனளிக்கும். திருக்குர்ஆனிலுள்ள முன்னறிவிப்புகள் நிறைவேறியிருப்பதைக் கண்டு அவர் இறைவனுக்கு நன்றி செலுத்துவார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களால் முன்னறிவிக்கப்பட்ட அந்த மஹ்தியின் காலத்தில் திருக்குர்ஆனின் பல்வேறு முன்னறிவிப்புகள் நிறைவேறுவதை நாம் பார்க்கின்றோம். அந்த மஹ்தியை ஏற்றுக் கொள்வதற்கான நற்பாக்கியம் நமக்கு கிடைத்திருக்கின்றது.

புதிய புதிய விஞ்ஞான கண்டுபிடிப்புகளைப் பார்க்கின்றபோது நமது உள்ளம் இறைவனைப் புகழ்கின்றது. ஏனென்றால் அவற்றைப் பற்றி 1400 வருடங்களுக்கு முன்பே அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறியிருக்கின்றான். நபிமார்களை மறுத்த இதற்கு முன் தோன்றிய சமுதாயங்கள் இந்த மறுப்பின் காரணமாக இறைவனது தண்டனைக்கு ஆளான சம்பவங்களை அல்லாஹ்வின் மீது

அச்சமுள்ள ஒருவர் படிக்கும்போது திருக்குர்ஆனிலிருந்து அவற்றை அறிந்து திருக்குர்ஆனின் சொற்களையும் அதன் மொழியாக்கத்தையும் அறிபவராக அவர் இருந்தால் நிச்சயமாக அவர் இஸ்திஃஃபார் செய்வார். அல்லாஹ் இப்படிப்பட்ட நிலையிலிருந்து நம்மை காப்பாற்றியுள்ளான். எதிர்காலத்திலும் நம்மை அவன் இவ்வாறு காப்பாற்ற வேண்டும் என்று அவர் கூறுவார். எந்த அளவு அவருக்கு திருக்குர்ஆனின் கருத்துக்கள் புரியுமோ அந்த அளவு அல்லாஹ்வின் வேதத்தின் மீது அவருக்குள்ள நம்பிக்கையும் உறுதியும் வளர்ந்துகொண்டே செல்லும். இதுதான் திருக்குர்ஆனை ஓதுவதற்குரிய உரிமையை நிறைவு செய்வதாகும்.

**ஹஸ்ரத் அபூஉபைதா மலிக்கி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.**
**ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:**

குர்ஆனை சார்ந்திருப்பவர்களே! திருக்குர்ஆனை ஓதாமல் நீங்கள் உறங்க வேண்டாம். திருக்குர்ஆனை இரவும், பகலும் அதை ஓத வேண்டிய உரிமைக்கு ஏற்ப ஓதுங்கள். திருக்குர்ஆனைப் பரப்புங்கள். அதை அழகிய ராகத்தில் ஓதுங்கள். அதன் கருத்துக்களை சிந்தனை செய்யுங்கள். அதன் மூலமாகவே நீங்கள் வெற்றி பெறுவீர்கள்.

எனவே, நான் தற்போது ஓதிய வசனத்திற்கு மேலும் விளக்கம் கிடைத்து விட்டது. திருக்குர்ஆனை அதற்குரிய உரிமைக்கு ஏற்ப ஓதுவதன் மூலமாக நீங்கள் இழப்புகளிலிருந்து தப்புவதுடன் மட்டுமல்லாமல் நீங்கள் வெற்றி பெற்றவர் களாகவும் ஆகி விடுகின்றீர்கள்.

திருக்குர்ஆனை அதற்குரிய உரிமையுடன் ஓதுபவர்களின் தகுதியைப் பற்றியும் அவ்வாறு ஓதுபவர்களின் பெற்றோர்களின் உயர் தகுதி பற்றியும் ஒரு நபிமொழியில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அந்த பெற்றோர் தங்கள் குழந்தைகளிடம் திருக்குர்ஆன் ஓதும் பழக்கத்தை ஏற்படுத்தினார்கள்.

ஹஸ்ரத் சஅத் பின் மஆத் (ரலி) அவர்கள் தனது தந்தையிடமிருந்து அறிவிக்கின்றார்கள். **ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள்** இவ்வாறு கூறினார்கள்:

எவர் திருக்குர்ஆனை ஓதி அதற்கேற்ப செயல்பட்டாரோ அவரது பெற்றோருக்கு மறுமை நாளில் இரண்டு கிரீடங்கள் அணிவிக்கப்படும். அதன் ஒளி சூரிய ஒளியை விட அதிகமாக இருக்கும். அந்த ஒளி உலகில் இப்படிப்பட்டவர்களது வீடுகளில் இருந்தது. இப்படிப்பட்டவர்களது பெற்றோருக்கு இப்படிப்பட்ட உயர்வான தகுதி கிடைக்கும்போது திருக்குர்ஆன் கூறுவதற்கு ஏற்ப செயல்படுபவரது தகுதி எவ்வளவு உயர்ந்தாக இருக்கும்?

திருக்குர்ஆனை தனது பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுப்பவர்களுக்கு இந்த அளவு உயர்வான கண்ணியம் கிடைக்கின்றது என்பதை பெற்றோர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். எனவே பிள்ளைகளுக்கு திருக்குர்ஆன் கற்றுக் கொடுப்பதிலும் அதை ஓதுவதில் ஆர்வத்தையும் பெற்றோர்கள் ஏற்படுத்த வேண்டும்.

**உம்முல் மூஃமினீன் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

எவர் திருக்குர்ஆனை ஓதுகின்றாரோ மேலும் அதனை மனனம் செய்துள்ள ஹாஃபிஸ் ஆக இருக்கின்றாரோ அவர்கள் மிகவும் கண்ணியத்திற்குரிய மிகவும் நல்ல மனிதர்களுடன் இருப்பார்கள். மேலும் எவர் திருக்குர்ஆனை ஓதிவிட்டு அதன் போதனைகளுக்கு ஏற்ப முழுமையாக செயல்படுவாரோ அவருக்கு இரண்டு மடங்கு நற்கூலி வழங்கப்படும்.

**ஹஸ்ரத் இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:**

எவ்வாறு இரும்பு துருப்பிடித்தால் அதை அகற்றுவதற்கு புடம் போடப்படுகிறதோ அவ்வாறே உள்ளங்களுக்கும் புடம் போடப்படுகிறது. அறிவிப்பாளர் கூறுகின்றார். அல்லாஹ்வின் தூதர்

அவர்களே! உள்ளங்களிலுள்ள துருக்களை அகற்றி அதை எப்படி தூய்மைப்படுத்த முடியும்? என்று நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கேட்டேன். அதற்கு அவர்கள், நீங்கள் மரணத்தை அதிகமாக நினைவு கூற வேண்டும். திருக்குர்ஆனை ஓத வேண்டும் என்று கூறினார்கள்.

மரணத்தைப் பற்றிய நினைவுதான் அல்லாஹ்வை நினைவு கூர்வதிலிருந்து கவனமற்றவர்களாக நாம் ஆகாமல் இருக்க உதவுகிறது. நற்கூலி அல்லது தண்டனை கிடைக்கக்கூடிய ஒரு நாள் வரும் என்ற உறுதி யாருக்கு ஏற்பட்டு விடுமோ, அவர் அல்லாஹ்வை நினைவு கூறாமல் இருக்க முடியாது. திருக்குர்ஆன் ஓதுவதை அதற்குரிய உரிமையுடன் நிறைவேற்றுபவருக்கு நன்மைகளை செய்வதற்குரிய நல்வாய்ப்பு கிடைக்கின்றது. அதன் காரணமாக ஒரு நம்பிக்கையாளர் இந்த உலகில் சிறந்த நற்கூலியைப் பெறுகின்றார். மேலும் மறுமையிலும் அவருக்கு சிறந்த நற்கூலி கிடைக்கும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எவ்வாறு திருக்குர்ஆன் ஓதினார்கள்? அதை விளக்குவது அவசியமாகும். ஏனென்றால் சிலர் திருக்குர்ஆனை விரைவாக ஓதுவதில் தங்களுக்கு மிகுந்த திறமை இருப்பதாக எண்ணுகின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழிமுறை இதற்கு முற்றிலும் மாற்றமானதாக இருக்கின்றது.

**ஹஸ்ரத் கதாதா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

நான் ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்களிடம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் திருக்குர்ஆன் ஓதுதல் பற்றி கேட்டேன். அதற்கு அவர்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நிறுத்தி நிதானமாக திருக்குர்ஆனை ஓதி வந்தார்கள்.

**மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

திருக்குர்ஆனைப் புரிவதற்கு பல வழிமுறைகள் உள்ளன. அதாவது, அதன் சொற்களில் நுட்பமான ஞானங்களின் முத்துக்கள் இருக்கின்றன. ஒவ்வொரு முறையும் அதை சிந்திப்பவர் அதன் நுட்பமான ஞானங்களைத் தேடி கண்டுபிடிக்கின்றபோது ஒரு புதிய அழகை அதில் காண்கின்றார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை விட அதிகமாக திருக்குர்ஆனிலுள்ள ஆழமான ஞானமிக்க விஷயங்களை வேறு எவரும் அறிந்திருக்க முடியாது. அவை, திருக்குர்ஆனின் சொற்களில் இருக்கின்றது. எனவே, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களே திருக்குர்ஆனை நிறுத்தி நிதானமாக ஓதும்போது அவர்கள் திருக்குர்ஆனிலுள்ள சொற்களின் பொருள்களையும், கருத்துக்களையும் உணர்ந்தவாறு அதன் ஆழத்தை தெரிந்து கொள்வதில் மிக உயர்வான நிலைக்கு சென்று விடுவார்கள். எனவே, அவர்களே திருக்குர்ஆனை நிறுத்தி நிதானமாக ஓதும்போது அவர்களின் இந்த அழகிய முன்மாதிரி நாமும் திருக்குர்ஆனின் கருத்துக்களை சிந்தனை செய்தவாறு அதை நிறுத்தி நிதானமாக ஓத வேண்டும் என்று நமக்கு கவனமூட்டுகிறது.

இவ்வாறு திருக்குர்ஆனை சிந்தித்து ஓதுவதன் பக்கம் கவனமூட்டியவாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனது தோழர் ஒருவருக்கு கவனமூட்டியது பற்றியும் ஒரு நபிமொழி அறிவிப்பு இருக்கின்றது.

**ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.**
**ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் என்னிடம் இவ்வாறு கூறினார்கள்:**

திருக்குர்ஆனை முழுமையாக ஒரு மாதத்தில் ஓதி முடியுங்கள். இதைக் கேட்ட நான் இதைவிட விரைவாக திருக்குர்ஆனை ஓதி முடிக்க ஆற்றல் உள்ளவனாக இருக்கின்றேன் என்று கூறினேன். அதைக் கேட்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பிறகு ஒரு வாரத்தில் திருக்குர்ஆனை ஓதி முடியுங்கள். அதற்கு முன்னதாக ஓதி முடிக்கக் கூடாது என்று கூறினார்கள்.

ஆக, ஒரு வாரத்திற்கு முன்னதாக திருக்குர்ஆனை ஓதி முடிக்க ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அனுமதி வழங்கவில்லை. ஏனென்றால், திருக்குர்ஆனை சிந்திப்பதற்குரிய கால அவகாசம் தேவை. விரைவாகப் படித்து முடிப்பது மட்டும் நோக்கமாக இருக்கக் கூடாது.

இந்த நபிமொழியிலிருந்தும் சஹாபாக்களுக்கு திருக்குர்ஆன் ஓதுவதில் உள்ள ஆர்வமும் தெரிய வருகிறது. அவர்கள் இதற்கு எந்த அளவு முக்கியத்துவம் கொடுத்துள்ளார்கள் என்பது தெரிகிறது.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நான் குர்ஆன் என்ற சொல்லை கவனமாக சிந்தித்தேன். அப்போது இந்த அருளுக்குரிய சொல்லில் ஒரு மகத்தான முன்னறிவிப்பு இருப்பது எனக்கு திறந்து தரப்பட்டது. அது என்னவென்றால், இந்த குர்ஆன்தான் படிப்பதற்குத் தகுதியுடைய நூலாகும். பிறகு இன்னொரு காலத்தில் இதுதான் இன்னும் அதிகமாக படிப்பதற்கு தகுதியுள்ள வேதமாக இருக்கும். அப்போது வேறு பல நூல்களும் திருக்குர்ஆனுடன் சேர்த்து படிக்கப்படும். அப்போது இஸ்லாத்தின் கண்ணியத்தை காப்பாற்றுவதற்கும் அதை பொய் என்று கூறுபவர்களை வீழ்ச்சியடையச் செய்வதற்கு இந்த ஒரு வேதநூல் மட்டும்தான் படிப்பதற்குத் தகுதியுடைய வேதமாக இருக்கும். மற்ற நூல்கள் முற்றிலும் கைவிடப்பட தகுதியுடையவையாக இருக்கும்.

எனவே, இந்த முக்கியமான கருத்தை ஒவ்வொரு அஹ்மதியும் புரிந்து கொள்ள வேண்டும்.

திருக்குர்ஆனின் போதனைகளின் பிம்பம் நமது ஒவ்வொரு செயல் மூலமாகவும் வெளிப்படும் போதுதான் இஸ்லாத்தின் போதனைகள் பொய் என்று கூறுபவர்களை நம்மால் வீழ்த்த முடியும். திருக்குர்ஆனை முறையாக ஓதி வருவதன் மூலமே இந்த போதனைகளின் அச்சு நமது செயல்களில் பதிய முடியும்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

திருக்குர்ஆனை கைவிட்டு விட்டு வெற்றி பெறுவது என்பது சாத்தியமற்ற ஒன்றாகும். இப்படிப்பட்ட வெற்றி ஒரு கற்பனையான விஷயம் மட்டுமேயாகும். இந்த மக்கள் அத்தகு வெற்றியைத் தேடி அலைகின்றார்கள். சஹாபாக்களின் முன்மாதிரியை கண்முன் நிறுத்தி செயல்படுங்கள். பாருங்கள்! எப்போது அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பின்பற்றி நடந்தார்களோ அப்போது அவர்கள் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்கினார்கள். அதன் மூலமாக அல்லாஹ் அவர்களிடம் செய்திருந்த எல்லா வாக்குறுதிகளும் நிறைவேறின. துவக்கத்தில் எதிரிகள் அவர்களை பரிகாசம் செய்தார்கள். சஹாபாக்களால் வெளியில் சுதந்திரமாக வரமுடியவில்லை. அந்நிலையில் நாங்கள் அரசர்களாக ஆகப்போகிறோம் என்ற அவர்களின் வாதத்தைக் கேட்டு எதிரிகள் அவர்களை எள்ளி நகையாடினர். ஆனால், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு கட்டுப்பட்டு நடப்பதில் தங்களை மாய்த்துக் கொண்டவர்களாக அவர்கள் இருந்ததன் காரணமாக பல நூற்றாண்டு காலம் பெற முடியாத அருள்களை அவர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு கட்டுப்படுதல் என்றால் என்ன? அது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது இறங்கிய போதனைகளை முழுமையாகப் பின்பற்றி நடக்க அவர்கள் செய்த முயற்சியே ஆகும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியதைப் போன்றே எந்த நகரத்தில் சஹாபாக்கள் சுதந்திரமாக வெளியில் கூட வரமுடியாத நிலை இருந்ததோ அதே நகரத்திலிருந்து ஒரு சமயத்தில் அவர்கள் வெளியேற்றப் பட்டார்கள். ஆனால், இந்த போதனைகளின்படி செயல்பட்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு கட்டுப்பட்டு நடந்ததன் விளைவாக அதே நகரத்தில் அந்த சஹாபாக்கள் வெற்றி வீரர்களாக நுழைந்ததை உலகமே கண்டது. இன்றும் நமக்கும் கிடைக்க இருக்கும் வெற்றி இதே போதனைகளின்படி செயல்படுவதன் மூலமாகத்தான் கிடைக்கும்.

பிறகு நல்ல குரலில் திருக்குர்ஆன் ஓதுமாறு போதனை செய்தவாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்ன கூறியுள்ளார்கள்? என்று பார்ப்போம்.

**ஹஸ்ரத் பரா பின் காஸிப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.**
**ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:**

உங்களது அழகிய குரல் மூலமாக திருக்குர்ஆனின் அழகை மேலும் அதிகரிக்கச் செய்யுங்கள். ஏனென்றால், அழகிய குரல் திருக்குர்ஆனின் அழகை மேலும் அதிகரிக்கச் செய்வதற்குக் காரணமாகத் திகழும்.

**இது தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

திருக்குர்ஆனை அழகிய குரலில் ஓத வேண்டும். மாறாக, இது எந்த அளவு வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது என்றால், எவர் திருக்குர்ஆனை அழகிய குரலில் ஓதுவதில்லையோ அவர் நம்மைச் சார்ந்தவரல்ல என்று வலியுறுத்திக் கூறப்பட்டிருக்கின்றது. ஏனென்றால், அதில் ஒரு சிறந்த தாக்கம் இருக்கின்றது. அழகிய குரலில் ஒருவர் சொற்பொழிவு நிகழ்த்தினால் அதன் தாக்கமும் பிறர் மீது ஏற்படத்தான் செய்கின்றது. அதே சொற்பொழிவை இன்னொருவர் நிகழ்த்தும் போது அவர் கூறுவது தெளிவற்ற நிலையில் இருந்தால் அதில் எந்த தாக்கமும் ஏற்படாது. எந்த வசனங்களில் அல்லாஹ் சிறந்த தாக்கத்தை வைத்துள்ளானோ அதனை மக்கள் இஸ்லாத்தின் பக்கம் ஈர்க்கின்ற ஒரு கருவியாக பயன்படுத்தினால் எவ்வளவு நன்றாக இருக்கும்? ஹஸ்ரத் தாவூத் (அலை) அவர்களுக்கு வழங்கப்பட்ட ஸபூர் சங்கீதத்தின் வடிவில் இருக்கிறது. அது பற்றி கூறப்பட்டிருப்பது என்னவென்றால் ஹஸ்ரத் தாவூத் (அலை) அவர்கள் இறைவனிடம் தனது கோரிக்கைகளை வைத்து அழும் போது மலைகளும் அவர்களுடன் சேர்ந்து அழுதன. பறவைகளும் அவர்களுடன் இணைந்து தஸ்பீஹ் செய்தன.

எனவே அழகிய குரலில் திருக்குர்ஆனை ஓதுவதன் நோக்கமும் இஸ்லாத்தை தப்லீக் செய்வதாக இருக்க வேண்டும். எவர் அழகிய குரலின் தாக்கத்தால் ஈர்க்கப்படுகின்றார்களோ அவர்களுக்கு அந்த தாக்கத்தை ஏற்படுத்தி விட்டு பிறகு திருக்குர்ஆனின் அழகிய போதனைகளின் தாக்கத்தையும் அவரிடம் ஏற்படுத்த வேண்டும்.

ஏற்கனவே நான் ஒரு நூலைப் பற்றி உங்களுக்கு கூறியிருந்தேன். அந்த நூலிலும் அதிகமான பெண்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதற்கான காரணமாக கூறியிருப்பது அவர்கள் திருக்குர்ஆனை அது ஓதப்படும்போது கேட்டார்கள். பின்னர் அதன் போதனைகளை அவர்கள் அறிந்தார்கள். அதை அவர்கள் மிகவும் விரும்பினார்கள். திருக்குர்ஆனும் இப்படித்தான் வாதம் செய்கின்றது. மனித இயல்புக்கு ஏற்ப உண்மையான நேர்வழி காட்டக்கூடிய போதனைகள் திருக்குர்ஆனில்தான் இருக்கின்றது என்று அது வாதம் செய்கின்றது.

**அல்லாஹ் கூறுகின்றான்:**

நிச்சயமாக இந்த குர்ஆன் எல்லாவற்றையும்விட அதிகமாக நிலைத்து நிற்கக்கூடிய வழிகளின் பக்கம் வழிகாட்டுகின்றது. அதிகமாக நற்செயல்களை செய்கின்ற நம்பிக்கையாளர் களுக்கு மிகப்பெரும் நற்கூலி இருப்பதாக அது நற்செய்தி கூறுகிறது. (17:10)

இந்த அறிவிப்பு முஸ்லிம் அல்லாதவர்களுக்கும் செய்யப்பட்டிருக்கிறது. மூஃமின்களுக்கும் செய்யப்பட்டிருக்கிறது. அதன் நேர்வழி காட்டலும் அதன் நோக்கங்களும் மிகவும் உயர்வானவையாகும். இதற்கு முன்தோன்றிய ஷரீஅத்துகள் முழுமை பெற்ற ஷரீஅத்தாக இருக்கவில்லை. மேலும் அது மனித இயல்புக்கும் ஏற்றதாக இல்லை. எனவே, நல்ல இயல்புள்ள மக்கள் இதன் போதனைகளை ஏற்றுக்கொள்வது அல்லாஹ்வின் இந்த அறிவிப்பை நிரூபிக்கின்ற உயிருள்ள சாட்சியாக இருக்கிறது.

முழுமைபெற்ற ஷரீஅத் எங்களுக்கு கிடைத்துள்ளது என்று கர்வத்துடன் பெருமையாக கூறிவிட்டு திருக்குர்ஆனின் போதனைகளுக்கு ஏற்ப ஒரு அஹ்மதி செயல்படாமல் இருந்தால், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியதைப்போல அவ்வாறு திருக்குர்ஆனை அதன் போதனைகள் செயல்படுத்தாத நிலையில் அதனை ஓதுபவர்கள் மீது திருக்குர்ஆன்

சாபமிடுகிறது. எனவே, அல்லாஹ்வின் தண்டனையிலிருந்து நாம் தப்புவதற்கு நற்செயல்களை செய்வது மிக மிக அவசியமானதாகும். இதில் நிலைத்து நிற்கும் வரை நேர்வழியை நாமும் பெற்று பிறருக்கும் காட்டிக் கொண்டிருப்போம்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இந்த குர்ஆன் சிறிதும் கோணலற்ற அந்த நேரான வழியை நமக்குக் காட்டுகிறது. அது மனித இயல்பிற்கு மிகவும் பொருத்தமானதாக இருக்கின்றது. உண்மையில் திருக்குர்ஆனின் சிறப்புகளில் ஒரு மிகப்பெரும் சிறப்பு அது ஒரு முழுமையான வட்டத்தைப் போல் ஆதமின் சந்ததிகளின் எல்லா ஆற்றல்களையும் சூழ்ந்து நிற்கின்றது. இந்த (17:10) வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அந்த நேரான வழி இதுவாகும். அந்த வழி மனித இயல்பிற்கு மிக அருகில் இருக்கின்றது. அதாவது எந்த முழுமை பெற்ற சிறப்புத் தன்மைகளைப் பெற்றுக் கொள்வதற்காக மனிதன் படைக்கப்பட்டுள்ளானோ அந்த எல்லா சிறப்புத் தன்மைகளின் வழிகளை அவனுக்கு காட்டுவதும் அந்த வழிகளை எளிதாக்கித் தருவதும் எந்த நேர்வழியைப் பெறுவதற்கான ஆற்றல்கள் மனிதனிடம் வைக்கப்பட்டுள்ளதோ அதற்கேற்ப அவனுக்கு நேர்வழி காட்டுவதும் திருக்குர்ஆனின் சிறப்பாகும். இந்த வசனத்தில் வரும் அக்வமு (நேரான பாதை) என்ற சொல்லின் கருத்து இதுவேயாகும்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

திருக்குர்ஆன் எந்த புதிய போதனையையும் கொண்டு வரவில்லை. மாறாக, மனிதனுக்குள் பல்வேறு வடிவங்களில் வைக்கப்பட்டுள்ள அவனுக்குள் இருக்கின்ற ஷரீஅத்தைத்தான் அது அவனுக்கு நினைவூட்டுகிறது. மென்மை, தியாக மனப்பான்மை, வீரம், பொறுமை, கோபம், போதுமென்ற மனம் போன்ற மனிதனின் அகத்தில் வைக்கப்பட்டுள்ள நல்லியல்புகளை திருக்குர்ஆன் அவனுக்கு நினைவூட்டி விட்டது. **ஃபி கிதாபுன் மக்னூன்** என்ற சொல் வந்திருக்கின்றது. அதாவது எந்த வேதத்தில் மனிதனின் இயல்பில் மறைவாக வைக்கப்பட்டுள்ளதோ, எதனை ஒவ்வொரு நபராலும் காண முடியாதோ அது திருக்குர்ஆனேயாகும். அவ்வாறே இந்த வேதத்திற்கு திக்ர் என்ற பெயரும் வைக்கப்பட்டிருக்கின்றது. அதாவது அது படிக்கப்படும் ஒரு வேதமாகும். அதன் மூலம் மனிதனின் அகத்திலுள்ள ஆன்மீக ஆற்றல்களையும் விண்ணிலிருந்து அவனிடம் வைக்கப்பட்டுள்ள அவனது உள்ளத்திலுள்ள ஒளியை நினைவூட்டக் கூடியதாக திருக்குர்ஆன் இருக்கின்றது. சுருக்கமாக, அல்லாஹ் திருக்குர்ஆனை இறக்கியதன் மூலம் ஒரு ஆன்மீக அற்புதத்தைக் காட்டியுள்ளான். அதன் காரணமாக மனிதன் இந்த இறை ஞானங்களையும் நுட்பமான உண்மைகளையும் வழக்கதிற்கு மாற்றமான ஆன்மீக அடையாளங்களையும் அறிந்து கொள்ள வேண்டும். இதற்கு முன்னர் இது தெரியாமல் இருந்திருக்கின்றது.

திருக்குர்ஆனை கவனமாக சிந்தித்து ஓதுவது தொடர்பாக **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

எவர் திருக்குர்ஆனின் 700 கட்டளைகளில் ஒரு சிறிய கட்டளையைக் கூட மீறி நடப்பாரோ அவர் தன் மீது இரட்சிப்பின் கதவுகளை தனது கைகளால் அடைக்கின்றார். உண்மையான முழுமை பெற்ற இரட்சிப்பின் வழிகளை திருக்குர்ஆன் திறந்து தந்துள்ளது. மற்றவை அனைத்தும் அதன் நிழலாகும். எனவே, நீங்கள் திருக்குர்ஆனைக் கவனமாக ஓதுங்கள். வேறு எதனிடமும் நீங்கள் வைக்காத அன்பை அதன் மீது வைக்கும் வகையில் அதை அதிகமாக நேசியுங்கள். ஏனென்றால், அல்லாஹ் என்னிடம் **அல் ஹைரு குல்லுஹு ஃபில் குர்ஆன்** - எல்லா விதமான நன்மைகளும் திருக்குர்ஆனில் இருக்கின்றது என்று கூறியுள்ளான். இந்த விஷயம் உண்மையானதாகும். அதை விட மற்றவற்றிற்கு முன்னுரிமை வழங்குபவர்கள் மீது அந்தோ பரிதாபம்! உங்களது எல்லா வெற்றிகள் மற்றும் இரட்சிப்பின் நீரூற்று திருக்குர்ஆனில் இருக்கின்றது. திருக்குர்ஆனில் காணப்படாத எந்தவொரு மார்க்கத் தேவையும் இல்லை. உங்களது ஈமானை மறுமை நாளில் உண்மைப்படுத்துவதும் பொய்ப்படுத்துவதும் திருக்குர்ஆனேயாகும். வானத்தின் கீழ் திருக்குர்ஆனைத் தவிர வேறு எந்தவொரு வேதமும் இல்லை. திருக்குர்ஆன் இல்லாமல் வேறு

எதுவும் உங்களுக்கு நேர்வழி காட்ட முடியாது. இறைவன் உங்கள் மீது மாபெரும் அருள் செய்துள்ளான். அவன் திருக்குர்ஆனை ஒரு வேதநூலாக உங்களுக்கு வழங்கியுள்ளான். நான் உங்களிடம் உண்மையாகவே கூறுகின்றேன். உங்களுக்காக அருளப்பட்ட அந்த வேதநூல் கிறிஸ்துவர்களுக்காக அருளப்பட்டிருந்தால் அவர்கள் அழிந்து போயிருக்கமாட்டார்கள். உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள இந்த அருட்கொடையும், நேர்வழியும் உங்களுக்குப் பதிலாக தவ்ராத்தைப் பின்பற்றிய யூதர்களுக்கு வழங்கப்பட்டிருந்தால் அவர்களில் சில பிரிவினர் மறுமை நாளை மறுத்திருக்கமாட்டார்கள். எனவே, உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள இந்த அருளுக்கு மதிப்பளியுங்கள். இது மிகவும் சிறந்த அருட்கொடயையாகும். இது மிகப்பெரும் செல்வமாகும். திருக்குர்ஆன் வராமலிருந்திருந்தால் முழு உலகமும் ஒரு கெட்டுப்போன பொருளைப் போன்றே இருந்திருக்கும். அந்த வேதத்திற்கு முன்னர் எல்லா நேர்வழிகாட்டலும் ஒன்றுமற்றவையாகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒரு அஹ்மதியிடம் எதிர்பார்ப்பது திருக்குர்ஆனின் எல்லா கட்டளைகளையும் பேணி நடப்பதின் மூலமாக நாம் இரட்சிப்பின் வழிகளைப் பெற்றுக் கொள்ள ஆர்வத்துடனும் துடிப்புடனும் நம்மில் ஒவ்வொருவரும் முயற்சி செய்ய வேண்டும் என்பதேயாகும். சஹாபாக்கள் சென்ற அதே வழிகளைப் பின்பற்றிச் செல்வதன் மூலமாகவே நமக்கு தக்வாவின் வழிகள் கிடைக்கும். காலத்தின் இமாமை ஏற்றுக்கொண்டு உலகில் ஒரு தூய மாற்றத்தை ஏற்படுத்துவோம் என்பது நமது வாதமாக இருந்தால், நாம் ஒரு ஆன்மீகப் புரட்சியை ஏற்படுத்துவதாக இருந்தால் நாம் முதலில் நமது நிலைமைகளில் புரட்சியை ஏற்படுத்த வேண்டும். நமது சந்ததிகளில் இந்த புரட்சியைக் கொண்டு வர வேண்டும். தங்களைச் சுற்றி இருப்பவர்களுக்கு இந்த ஒளிமயமான போதனைகளைப் பற்றி தெரிவிக்க வேண்டும். இஸ்லாத்தின் மீது ஆட்சேபனை செய்பவர்களது வாயை அடைப்பதற்கு இஸ்லாத்தின் போதனைகளின்படி நாம் செயல்படுவதே சிறந்த வழியாகும். இஸ்லாத்தின் போதனைகளின் பக்கம் உலகின் கவனம் ஏன் திரும்பியுள்ளது? என்று கவலைப்படுபவர்களுக்கும் அதை ஆய்வு செய்வதற்காக பல்வேறு நாடுகளில் பணம் செலவு செய்பவர்களுக்கும் பதிலடி கொடுக்கும் வகையில் அவர்களது மறைமுகமான தாக்குதல்களை எதிர்த்து நிற்கும் வகையில் ஒரு அஹ்மதி இந்த திருக்குர்ஆனை அதை ஓதுவதற்குரிய முழுமையான உரிமையை நிறைவேற்றியவாறு ஓத வேண்டும். அதன் போதனைகளுக்கு ஏற்ப செயல்பட்டு உங்களையும் உலகத்தையும் காப்பாற்றுங்கள். எனவே, இஸ்லாத்தை எதிர்க்கும் சக்திகள் அதற்காக பல்வேறு ஆயுதங்களை பயன்படுத்திக் கொண்டிருக்கும் போது நமது பணி திருக்குர்ஆனை கவனமாக சிந்தனை செய்து முன்பை விட அதிகமாக இந்த திருக்குர்ஆனை இறக்கியுள்ள இறைவன் முன்னால் குனிய வேண்டும். அதன் மூலமாக இறையருட்களுக்கு நாம் வாரிசாக வேண்டும். அல்லாஹ் அதற்கான நற்பாக்கியத்தை நமக்கு வழங்குவானாக! ஆமீன்.

**JUMUA KUTHBA**
***HADHRAT KHALIFATUL MASIH V***
**AT BAITUL FUTUH, LONDON**
**ON 07.03.2008**

Translated by : **Maulavi M. Rafeeq Ahmad H.A**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**